Australian Government

Department of Immigration and Citizenship

# வயதுவந்த குடிபெயர்வாளருக்கான ஆங்கில மொழிப் பயிற்சித் திட்டத்தினை (AMEP) வழங்குவதற்காகச் சேகரிக்கப்பட்ட தனிப்பட்ட தகவல்கள்

குடிவரவுத் துறை மற்றும் குடியுரிமை (துறை) AMEP-க்காக உங்கள் தனிப்பட்ட தகவல்களைச் சேகரிக்குமாறு AMEP சேவை வழங்குநர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்கள். தகவல் சேகரிப்பானது *குடிபெயர்வுச் சட்டம் 1958* இன் பகுதி 2 இன் கீழ் அங்கீகரிக்கப்படுகிறது.

சேகரிக்கப்படும் தகவல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்ற பிற அரசாங்கத் திட்டங்கள் மற்றும் சேவைகளின் நிர்வாக நோக்கத்துக்காக பிற முகமைகள் அல்லது நிறுவனங்களுக்கு வெளிப்படுத்தப்படலாம்:

- குழந்தை பராமரிப்பு மையங்கள், இதன் மூலம் குழந்தை பராமரிப்பானது தகுதியுள்ள AMEP வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட முடியும்
- வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் திட்டத்துக்கு AMEP குடியமர்த்தல் மொழிப் பாதைகளில் ஈடுபடும் பணி வழங்குநர்கள்
- புதிதாக வந்தடைந்த குடிபெயர்வாளர்களுக்கு குடியேற்றச் சேவைகளை வழங்குவதற்கு குடிவரவுத் துறையால் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்ட சேவை வழங்குநர்கள்
- பின்வருவனவற்றை உள்ளடக்குகின்ற அரசாங்கத் துறைகள்:
    - அரசாங்க உதவித்தொகைகள் மற்றும் நன்மைகளை நிர்வகிக்கும் சென்டர்லிங்க்
    - வேலைவாய்ப்பு மற்றும் பணியிடத் தொடர்புகள் துறை (DEEWR) மற்றும்
    - ஆஸ்திரேலியப் பணிச் சேவைகள் மற்றும் ஊனமுற்றோர் வேலைவாய்ப்புச் சேவைகள் உள்ளிட்ட சேவைகளை DEEWR இன் சார்பாக வழங்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட சேவை வழங்குநர்கள்
- புலனாய்வு அல்லது நெருக்கடிநிலைச் சூழ்நிலைகளில் உதவுவதற்கு மத்திய, மாநில மற்றும் பிராந்திய காவல்துறைகள

மேலும், தகவல் படிவம் 993iஉங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாத்தல் என்பது உங்கள் தனிப்பட்ட தகவல்களை வெளிப்படுத்தப்படக்கூடிய முகமைகளின் விவரங்களை அளிக்கின்றது. படிவம் 993i ஆனது குடிவரவுத் துறையின் வலைத்தளமான www.immi.gov.au/allforms/ அல்லது துறையின் ஏதேனும் அலுவலகத்தில் அல்லது வெளிநாடுகளில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகத்தில் இருந்து கிடைக்கப் பெறும்.

## உங்கள் உரிமைகள்

சேவை வழங்குநர் அல்லது குடிவரவுத் துறை உங்கள் தகவல்களைப் பிழையாக சேகரித்துள்ளது அல்லது கையாண்டுள்ளது என்று நீங்கள் நம்பினால், இந்த முகவரிக்கு எழுதலாம்:

The Director
Freedom of Information and Privacy Policy Section
Department of Immigration and Citizenship
PO Box 25
BELCONNEN ACT 2616

அல்லது privacy@immi.gov.au க்கு மின்னஞ்சல் அனுப்பவும்

உங்கள் புகார் விசாரணை செய்யப்பட்டு, விளைவு பற்றி உங்களுக்கு ஆலோசனை கூறப்படும்.